# Chapter – 16

# பயன்பாட்டு வேதியியல்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடு.

**Question 1.**
ஒரு நானோ மீட்டர் என்பது

அ) 10 மீட்டர்
ஆ) 10 மீட்டர்
இ) 10 மீட்டர்
ஈ) 10 மீட்டர்

**விடை:**
ஈ) 10 மீட்டர்

**Question 2.**
பென்சிலின் எனப்படும் எதிர் நுண்ணுயிரி ...................................... லிருந்து பெறப்படுகிறது.

அ) தாவரங்கள்
ஆ) நுண்ணுயிரிகள்
இ) விலங்குகள்
ஈ) சூரிய ஒளி

**விடை:**
ஆ) நுண்ணுயிரிகள்

**Question 3.**
1% அயோடோபார்ம் ...................................... ஆக பயன்படுத்தப்படுகிறது

அ) எதிர் நுண்ணுயிரி
ஆ) மலேரியா

இ) புரைத்தடுப்பான்
ஈ) அமில நீக்கி

**விடை:**
இ) புரைத்தடுப்பான்

**Question 4.**
ஒரு மின் வேதிக்கலத்தில் எதிர் மின்வாயில் ....................................... நிகழும்.

அ) ஆக்ஸிஜனேற்றம்
ஆ) ஒடுக்கம்
இ) நடுநிலையாக்கல்
ஈ) சங்கிலி இணைப்பு

**விடை:**
ஆ) ஒடுக்கம்

**Question 5.**
இறந்த விலங்குகளின் வயதைத் தீர்மானிக்க ஐசோடோப்பைப் பயன்படுத்தலாம்.

அ) கார்பன்
ஆ) அயோடின்
இ) பாஸ்பரஸ்
ஈ) ஆக்ஸிஜன்

**விடை:**
அ) கார்பன்

**Question 6.**
பின்வருவனவற்றுள் எது இயற்கைச் சாயம் இல்லை?

அ) உருளைக்கிழங்கு
ஆ) பீட்ரூட்
இ) கேரட்

ஈ) மஞ்சள்

**விடை:**
அ) உருளைக்கிழங்கு

**Question 7.**
....................................... வகை உணவுகள் குறைபாட்டு நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கின்றன.

அ) கார்போஹைட்ரேட்
அ) வைட்டமின்கள்
இ) புரதங்க ள்
ஈ) கொழுப்புகள்

**விடை:**
ஆ) வைட்டமின்கள்

**Question 8.**
கதிரியக்கவியலுடன் தொடர்புள்ளது எது?

அ) ஆக்ஸிஜனேற்றம்
ஆ) மின்கலங்கள்
இ) ஐசோடோப்புகள்
ஈ) நானோதுகள்கள்

**விடை:**
இ) ஐசோடோப்புகள்

**Question 9.**
ஒரு கரிமச் சேர்மத்தின் நிறத்திற்குக் காரணமான குழுக்கள் ....................................... என அழைக்கப்படுகின்றன.

அ) ஐசோடோப்புகள்
ஆ) நிற உயர்த்தி
இ) நிற ஜனனிகள்
ஈ) நிறத் தாங்கி

**விடை:**
ஈ) நிறத் தாங்கி

**Question 10.**
குளோரினேற்றப்பட்ட ஹைட்ரோகார்பன்கள் ....................................... ஆக பயன்படுத்தப்படுகின்றன.

அ) உரங்கள்
ஆ) பூச்சிக்கொல்லிகள்
இ) உணவு நிறமிகள்
ஈ) உணவு பதப்படுத்திகள்

**விடை:**
ஆ) பூச்சிக்கொல்லிகள்

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

**Question 1.**
மின் ஆற்றலை வேதி ஆற்றலாக மாற்றும் வேதிமின்கலம் ....................................... ஆகும்.

**விடை:**
மின்பகுப்புக்கலம்

**Question 2.**
வலிமருந்துகள் ....................................... என்று அழைக்கப்படுகின்றன.

**விடை:**
வலி நிவாரணிகள்

**Question 3.**
இண்டிகோ ஒரு ....................................... சாயம் மற்றும்

**விடை:**
தொட்டி

**Question 4.**
………………………………., ……………………………… ஆகியவை தாவர வளர்ச்சிக்குத் தேவையான பெரும நுண் ஊட்டத் தனிமங்கள் ஆகும்.

**விடை:**
நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம்

**Question 5.**
கைரேகைப் பதிவைக் கண்டறியப் பயன்படும் வேதிப்பொருள் ……………………………… ஆகும்.

**விடை:**
நின்ஹைட்ரின்

## III. பொருத்துக

| அ | | ஆ | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1. | காய்ச்சல் நிவாரணி (ஆன்டிபைரின்) | a | பெரிய மேற்பரப்புப் பகுதி | c | காய்ச்சல் |
| 2. | அரிப்பைத் தடுத்தல் | b | அயோடின் 131 | e | மின் முலாம் பூசுதல் |
| 3. | ஹைப்பர் தைராய்டிசம் | c | காய்ச்சல் | b | அயோடின் 131 |
| 4. | நானோ துகள்கள் | d | புற்றுநோய் செல்களை கண்டறிதல் | a | பெரிய மேற்பரப்புப் பகுதி |
| 5. | நானோ ரோபாட்டிக்ஸ் | e | மின் முலாம் பூசுதல் | d | புற்றுநோய் செல்களை கண்டறிதல் |

## IV. சுருக்கமாக விடையளி.

**Question 1.**
கார்பன் தேதியிடல் என்றால் என்ன?

**விடை:**

- இது C-14 ஐசோடாப்பை பயன்படுத்தி புதைபடிவ மரங்கள் அல்லது விலங்குகளின் வயதைத் தீர்மானிக்க உதவும் முறையாகும்.

**Question 2.**
மயக்கமூட்டிகள் என்றால் என்ன? அவை எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?

**விடை:**

- உணர்வை இழக்கச் செய்யும் மருந்துகள் மயக்க மூட்டிகள் எனப்படும்.
- இவை இருவகைப்படும்.
- பொது மயக்கமூட்டிகள்
- குறிப்பிட்ட மயக்கமூட்டிகள்

**Question 3.**
பயிர்த்துறையில் இரசாயன வேதியியல் உரங்களின் தேவை என்ன?

**விடை:**

- தாவர வளர்ச்சிக்குத் தேவையான நுண் ஊட்டச்சத்து மற்றும் பெரும ஊட்டச் சத்துக்களை வழங்குவதற்கு இரசாயன உரங்கள் தேவைப்படுகிறது.

**Question 4.**
தடயவியல் வேதியியலின் தொடர்புகள் யாவை?

**விடை:**

- குற்றம் பற்றிய விசாரணைக்கு அறிவியல் கொள்கைகள், மற்றும் நுட்பங்களை தடயவியல் வேதியியல் பயன்படுத்துகிறது.
- 1- கைரேகை பதிவு,
- 2 – ஆல்கஹால் பரிசோதனை,
- 3 – தடய நச்சுவியல்

## V. விரிவாக விடையளி.

**Question 1.**
பயன்பாட்டின் அடிப்படையில் சாயங்களை வகைப்படுத்துக.

**விடை:**
**1. அமிலச் சாயங்கள் :**

- அமிலத் தன்மை கொண்டவை.
- விலங்குத் தோல், செயற்கை இழை மற்றும் கம்பளி, பட்டு போன்ற புரத நூலிழைகளை சாயமேற்ற பயன்படுகிறது.
- எ.கா : பிக்ரிக் அமிலம், மஞ்சள் நாப்தால்

**2. காரச் சாயங்கள் :**

- காரத்தொகுதிகளைக் கொண்டுள்ளன.
- தாவர மற்றும் விலங்கு நூலிழைகளைச் சாயமேற்ற பயன்படுகின்றன.

**மறைமுக சாயம் :**

- பருத்தி ஆடைகளுடன் குறைவான ஈர்ப்புத் தன்மையைக் கொண்டுள்ளதால் நேரடியாக அவற்றின் மீது படிவதில்லை.
- எனவே இவை முதலில் நிறமூன்றிகளுடன் செயல்படுத்தப்பட வேண்டும்.
- நிறமூன்றி என்பது துணிகளுடன் இணைக்கப்பட்டு பிறகு சாயங்களுடன் லேக் எனும் கரையாத கூட்டுப்பொருள் உருவாதலால் இணைக்கப்படக்கூடிய பொருளாகும்.
- அலுமினியம், குரோமியம் மற்றும் இரும்பின் உப்புகள் நிறமூன்றிகளாக பயன்படுகின்றன.
- எ.கா. அலிசரின்.

**4. நேரடி சாயங்கள் :**

- பருத்தி, ரேயான் மற்றும் இதர செல்லுலோஸ் இழைகளுடன் அதிக கவர்ச்சி உடையன.
- துணிகளுடன் உறுதியாக ஒட்டிக்கொள்வதால் நேரடியாக பயன்படுத்தப்படுகின்றன.
- எ.கா : காங்கோ சிவப்பு

**5. தொட்டிச்சாயம் :**

- பருத்தி இழைகளுக்கு மட்டுமே பயன்படக்கூடியது.
- பட்டு மற்றும் கம்பளி இழைகளுக்கு பயன்படாது.
- இந்த சாயமிடுதல் தொடர்ச்சியான செயல்பாடாகும்.
- இவற்றை செயல்படுத்த தொட்டி எனும் பெரிய கலன் தேவைப்படுவதால் இவை தொட்டிச் சாயம் எனப்படுகிறது. எ.கா : இண்டிகோ.

**Question 2.**
பல்வேறு உணவுச் சேர்க்கைகளின் பெயர் மற்றும் செயல்பாடுகளை எழுதுக.

**விடை:**

- ஒரு சில சிறப்பான செயல்பாடுகளுக்காக உணவில் சேர்க்கப்படும் வேதிப் பொருட்கள் உணவுச் சேர்க்கைகள் எனப்படும்.

| | உணவுச் சேர்க்கை வகைகள் | செயல்பாடு | உதாரணம் |
|---|---|---|---|
| 1 | உணவு பதப்படுத்திகள் | நுண்ணுயிரிகளால் ஏற்படும் பாதிப்பிலிருந்து உணவைப் பாதுகாக்கின்றன. | வினிகர், பென்சாயிக் அமிலம் |
| 2 | நிறமிகள் | உணவிற்கு இனிய நிறத்தைக் கொடுக்கின்றன | குர்குமின் |
| 3 | செயற்கை இனிப்பூட்டிகள் | உணவில் இனிப்புச் சுவையைக் கூட்டுகின்றன. | சாக்கரீன், சைக்லமேட் |

| | | | |
|---|---|---|---|
| 4 | சுவையூட்டிகள் | உணவு வகைகளின் சுவையை மேம்படுத்துகின்றன. | மோனோசோடியம் குளுட்டமேட், கால்சியம் டைகுளுட்டமேட் |
| 5 | எதிர் ஆக்ஸிஜனேற்றிகள் | ஆக்சிஜனேற்றத்தைத் தடுத்து உணவின் தன்மையைக் கெடாமல் பாதுகாக்கின்றன. இதய நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கின்றன. | வைட்டமின் C, வைட்டமின் E. கரோட்டின் |

## VI. உயர் சிந்தனை வினாக்கள்

**Question 1.**
கைபேசியில் பயன்படுத்தப்படும் மின்கலங்களை மறு ஊட்டம் (ரீசார்ஜ்) செய்ய வேண்டும். அதேபோல், நீங்கள் கடிகாரங்களில் பயன்படுத்தப்படும் மின்கலங்களை மறு ஊட்டம் செய்யமுடியுமா? ஆராய்ந்து பதில் கூறுக.

**விடை:**

- கடிகாரங்களில் பயன்படுத்தப்படும் மின்கலங்களை மறு ஊட்டம் செய்ய முடியாது.
- ஏனெனில் அவை மறு ஊட்டம் செய்ய இயலா மின்கலங்கள்.
- அவற்றை மறு ஊட்டம் செய்ய முயற்சி செய்தால் மின்கலங்கள் வெப்பமாகி கசிவு ஏற்படலாம் அல்லது வெடிக்க நேரிடலாம்.

**Question 2.**
சுதாவுக்கு தீ விபத்து ஏற்பட்டது. அவள் எந்தவித மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும்?

**விடை:**

- நோய்களை ஏற்படுத்தும் நுண்ணுயிரிகளால் ஏற்படும் தொற்றை நீக்குவதற்கு புரைதடுப்பான்களை பயன்படுத்த வேண்டும்.

- **எ.கா :** அயோடோபார்ம் எல்லா வகையான வலிகளிலிருந்தும் நிவாரணம் அளிக்கும் வலி நிவாரணிகளை பயன்படுத்த வேண்டும்.
- **எ.கா :** ஆஸ்பிரின் காய்ச்சலைக் குறைக்கும் காய்ச்சல் நிவாரணிகளை பயன்படுத்தவேண்டும். எ.கா. ஆஸ்பிரின் அல்லது பாராசிட்டமால்
- நுண்ணுயிர்களின் வளர்ச்சி மற்றும் வளர்சிதை மாற்றத்தைத் தடுக்கும் நுண்ணுயிர் எதிரிகளை பயன்படுத்த வேண்டும். எ.கா : பென்சிலின்

**Question 3.**
ஓர் பயிர் நிலத்தில் மண்ணின் pH மதிப்பு 5. அங்கு என்ன வகையான உரங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்?

**விடை:**

- பயிர் நிலங்களுக்கேற்ற மண்ணின் pH மதிப்பு பயிர்களைப் பொறுத்தது.
- இது பொதுவாக 6 முதல் 7 ஆகும். இம்மதிப்பு சிறிதளவு அமிலத்தன்மையுடைய மண்ணைக் குறிக்கும்.
- ஆனால் பயிர் நிலத்தின் மண்ணின் pH மதிப்பு 5 எனில் அது அதிக அமிலத்தன்மை உடையது.
- எனவே அமிலத்தன்மையை குறைப்பதற்கு காரத்தன்மையுடைய உரங்களை பயன்படுத்த வேண்டும். எ.கா : கால்சியம் பாஸ்பேட், அம்மோனியம் நைட்ரேட்.